பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ.வெ.எண். 638 **நாள்: 01.11.2026**

முதலமைச்சரின் ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டு இயக்க (CMIUDM) திட்டத்தின் கீழ், பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் புதிய சாலைகள் அமைக்கப்படும் போது பழைய சாலைகள் முழுவதும் அகழ்ந்தெடுக்கப்பட்டு, சரியான அளவீடுகளில் சாலை அமைக்கப்படுவதை திட்ட மேலாண்மைக்கான ஆலோசகர்களால் ஆய்வு செய்யப்பட்டு உரிய புகைப்படம் மற்றும் வீடியோ எடுத்து உறுதி செய்யப்படும்.

பழைய சாலையினை முறையாக அகழ்ந்தெடுக்கும் பணி மேற்கொள்ளாமல் புதிய தார்ச்சாலைப் பணியினை மேற்கொள்ளும் அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தகவல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில், முதலமைச்சரின் ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டு இயக்க (CMIUDM) திட்டத்தின் கீழ் ரூ.300 கோடி நிதி ஒதுக்கீட்டில் சாலைகளில் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள 110 விதியின் கீழ் அறிவித்துள்ளதைத் தொடர்ந்து, முதற்கட்டமாக ரூ.154.16 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை (DPR) தயாரிக்கப்பட்டு, அதில் கண்காணிப்புக் குழுவின் பரிந்துரையின்படி முதற்கட்டமாக ரூ.130.19 கோடி மதிப்பீட்டில் சாலைப்பணிகள் மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளது.

ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் முடிவுற்று சாலைப் பணிகள் மேற்கொள்ளும்போது தரமாகவும், அளவீடுகள் சரியாகவும் அமைப்பது குறித்து மாநகராட்சி ஆணையாளர் அவர்களால் வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கி அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 418.56 கி.மீ. நீளமுடைய 488 எண்ணிக்கையிலான பேருந்து தட சாலைகளும், 5,653.89 கி.மீ. நீளமுடைய 35,978 எண்ணிக்கையிலான உட்புறச் சாலைகளும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் பெரும்பாலானவை தார்ச்சாலைகளாகும். இந்த தார்ச்சாலைகள் பல்வேறு நிதி ஆதாரங்கள் மூலம் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

தார்ச்சாலைகள் மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளும் போது ஏற்கனவே உள்ள சாலைகளின் மேற்பரப்பின் பழைய தார் அடுக்கினை (Bituminous layer) முழுவதும் அகழ்ந்தெடுத்து, புதியதாக தார்ச்சாலைகள் அமைக்கப்படும். இதற்காக Cold Milling Machine சிறப்பு இயந்திரம் பயன்படுத்தப்படுகிறது. இவ்வாறு பழைய தார் அடுக்கினை அகழ்ந்தெடுக்கும் முறை மில்லிங் (Milling) ஆகும்.

மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, மாநகராட்சிப் பகுதிகளில் புதிதாக சாலை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளும்போது அனைத்து தார்ச்சாலைகளையும் முழுவதும் அகழ்ந்தெடுத்த பிறகே புதிதாக தார்ச்சாலை அமைத்திட வேண்டும். சாலையில் புதிதாக எவ்வளவு கனத்தில் தார்ச்சாலை அமைக்கப்படுகிறதோ அதே அளவிற்கு அகழ்ந்தெடுக்கும் பணியும் மேற்கொள்ளப்பட வேண்டும். இதனால் ஏற்கனவே சாலை எந்த அளவு உயரமாக உள்ளதோ புதிய தார்ச்சாலை அமைத்த பிறகும் அதே உயரம் பராமரிக்கப்படும். சிறப்பு இயந்திரத்தால் (Cold milling machine) அகழ்ந்தெடுக்க முடியாத ஓரப் பகுதிகளில் வேறு இயந்திரங்கள் அல்லது பணியாளர்களால் நேரடியாக அகற்றப்பட வேண்டும். இதனால் கட்டடங்கள் சாலை மட்டத்திற்கு கீழ் செல்வதை தவிர்க்க முடியும்.

பழுதடைந்த பழைய தார் அடுக்கை அகற்றி புதிய தார்ச்சாலை அமைப்பதால் சாலையின் உயரத்தை ஏற்கனவே உள்ள சாலையின் உயரத்திற்கு சமமாக உருவாக்கலாம். மேலும் சாலையிலுள்ள மேடுபள்ளங்களை சரி செய்வதோடு, சாலையில் மழைநீர் தேங்காமல் இருக்கும் வகையில் அமைக்கப்படும்.

மேற்படி அகழ்ந்தெடுக்கும் பணி செய்த பிறகுதான் புதிய சாலைகள் அமைக்கப்படுகின்றன என்பதை GPS பதிவுடன் கூடிய புகைப்படங்கள் மற்றும் வீடியோ பதிவு செய்தபின் புதிய சாலைகள் அமைக்கப்பட வேண்டும். சரியாக அகழ்ந்தெடுக்கும் பணி செய்யப்படுகிறதா என்பதை சாலைப்பணி மேற்கொள்ளும் பொறியாளர்கள் உறுதி செய்ய வேண்டும். இதனை கண்காணிப்பதற்கு உயர் அலுவலர்கள் தலைமையில் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

பழைய சாலைகளில் சரியாக அகழ்ந்தெடுக்கும் பணி மேற்கொள்ளாமல் புதிய தார்ச்சாலை அமைத்தால், பணி மேற்கொண்ட சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்வாறான அகழ்ந்தெடுக்கும் பணிகளை திட்ட மேலாண்மைக்கான ஆலோசகர் (Project Management Consultant) களத்தில் அளவீடு செய்து சரியாக அகழ்ந்தெடுக்கப்பட்டதற்கான சான்றுகளை உரிய புகைப்படம் மற்றும் வீடியோ எடுத்து பதிவு செய்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த நிகழ்வுகள் அனைத்தும் பெருநகர சென்னை மாநகராட்சியின் வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்படும்.

மேற்கண்ட தகவலை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,

பெருநகர சென்னை மாநகராட்சி.

Greater Chennai Corporation
Press Release

P.R. No.: 639 **Date: 01.11.2026**

Under the Chief Minister's Integrated Urban Development Mission (CMIUDM) scheme, when new roads are laid in the Greater Chennai Corporation areas, the complete milling of old roads and laying them to precise measurements will be inspected by Project Management Consultants and confirmed with appropriate photographs and videos.

Strict action will be taken against officials and contractors who undertake new bituminous road works without properly milling the old road.

Following the announcement made under Rule 110 by the Hon'ble Chief Minister of Tamil Nadu to undertake road improvement works in the Greater Chennai Corporation areas with an allocation of Rs. 300 crores under the Chief Minister's Integrated Urban Development Mission (CMIUDM) scheme, a Detailed Project Report (DPR) was prepared at an initial estimate of Rs. 154.16 crores. Based on the recommendations of the monitoring committee, approval has been obtained to execute road works worth Rs. 130.19 crores in the first phase, and tenders have been invited.

Upon completion of the tender procedures and while executing the road works, instructions have been given by the Corporation Commissioner to officials regarding ensuring high quality and accurate measurements.

A total of 488 Bus Route Roads with a length of 418.56 km and 35,978 interior roads with a length of 5,653.89 km are being maintained within the Greater Chennai Corporation. Most of these are bituminous (tar) roads. These bituminous roads are upgraded once every 5 years through various financial resources.

During the upgrading of bituminous roads, the old bituminous layer on the existing road surface is completely removed before laying new bituminous roads. A special equipment called a Cold Milling Machine is used for this purpose. This process of removing the old bituminous layer is known as "Milling".

As per the instructions of the Corporation Commissioner, when undertaking new road improvement works in corporation areas, all bituminous roads must be completely milled before laying new bituminous roads. The milling work must be carried out to the exact thickness at which the new bituminous road is being laid. Consequently, the height of the road will remain

the same after laying the new road as it was previously. Edge areas that cannot be milled by the special machine (Cold milling machine) must be directly removed using other equipment or manual laborers. This prevents buildings from sinking below the road level.

By removing the damaged old bituminous layer and laying a new one, the height of the road can be maintained equal to the existing road level. Furthermore, it helps correct undulations on the road and is designed in a way that prevents rainwater stagnation.

New roads must be laid only after capturing GPS-tagged photographs and video recordings to verify that the aforementioned milling work has been completed. Engineers undertaking the road works must ensure that the milling process is done correctly. A monitoring committee headed by senior officials has been formed to oversee this.

If new bituminous roads are laid without properly milling the old roads, severe action will be taken against the concerned officials and contractors who executed the work. Project Management Consultants have been instructed to measure these milling works on-site, record certifications of correct milling through proper photographs and videos, and log them. All these events will be uploaded to the Greater Chennai Corporation website.

Issued by: Joint Director / Public Relations Officer,
Greater Chennai Corporation.